

# தி.மு.க. இளைஞர் அணி



## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் தெற்கு & மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ராயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| | மாலை 4.00 மணி | மயிலாடுதுறை | விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |
| 28.05.2025 புதன்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் மத்திய | அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் அருகே வளையங்குளம் கிராமத்தில் மழையின் காரணமாக வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்த 3 நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 4 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 12 இலட்சம் நிவாரண உதவித் தொகைக்கான காசோலைகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் வழங்கி ஆறுதல் கூறினார் . உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் சிவஜோதி உட்பட பலர் உள்ளனர்.

---

### சிவகங்கை மாவட்டம், மல்லாக்கோட்டை கிராமத்திலுள்ள

## கல் குவாரியில் பாறை - மண் சரிந்து விழுந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 22–

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மல்லாக்கோட்டை கிராமத்திலுள்ள கல் குவாரியில் பாறை மற்றும் மண் சரிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:–

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மல்லாக்கோட்டை கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான கல் குவாரியில் நேற்று முன்தினம் (20.5.2025) காலை எதிர்பாராதவிதமாக பாறை மற்றும் மண் சரிந்து விழுந்த விபத்தில் கல் குவாரியில் பணி செய்துகொண்டிருந்த முருகானந்தம், ஆறுமுகம், கணேசன், ஆண்டிச்சாமி மற்றும் ஒடிசா மாநிலத்தைச் சேரந்த ஹர்ஷித் ஆகிய ஐந்து நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் உடனடியாக மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுறுத்தியதோடு, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பி மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்அறிவுத்தினேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மைக்கேல் என்பவருக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

### முதல்வர் ரூ. 16 லட்சமும் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ரூ. 2 லட்சமும் நிதியுதவி!

## சிவகங்கை அருகே கல்குவாரியில் இறந்தவர்களின் இறுதிச் சடங்கு!

### அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பங்கேற்று அஞ்சலி!

*சிவகங்கை. மே 22.*

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி தாலுகா மல்லாக்கோட்டையில் தனியார் கல்குவாரி உள்ளது. நேற்று முன்தினம் அந்த கல்குவாரியில் 10க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியினை மேற்கொண்டிருந்தார்கள்.

தொடர்ந்து அப்பகுதியில் பெய்த மழையினால் ஐந்து ஊழியர்கள் கல் பாறைகள் இடிந்து விழுந்ததிலும் மணல் சிதறியதில் இடிபாடுகளில் சிக்கி 5 பேர் உயிரிழந்தார்கள். காவல்துறை தீயணைப்பு வீரர்கள் மீட்பு படையினர் விரைந்து நான்கு பேர்உடல்களை மீட்டு சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தார்கள்.

இதில் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த அர்ஜித் இடிபாடுகளில் சிக்கியதால் அவரது உடலை எடுக்க முடியவில்லை . இது இது பற்றிய தகவல் கிடைத்ததும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மல்லாக்கோட்டை கிராமத்திற்கு சென்று நிவார ன பணிகளை தீவிர படுத்தினார். இடிபாட்டில் சிக்கிக் கொண்ட ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த அர்ஜீத்தின் உடலை மீட்பதற்காக திருநெல்வேலி ராதாபுரத்திலிருந்து தேசிய மீட்புப் படையினர் வருவதற்கான ஏற்பாடுகளை செய்திடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ,மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் ஆலோசனை கூறினார்.மேலும் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இறந்து போன நான்கு பேர்களின் உடலை விரைவாக மாலைக்குள் பிரேதப் பரிசோதனை முடித்து ஒப்படைக்குமாறு அங்குள்ள மருத்துவர் செந்திலிடம் கூறினார்.

அமைச்சரின் வேண்டுகோளை ஏற்று தொடர்ந்து மருத்துவக் குழுவினர் நான்கு பேரின் ஊடல்களை பிரேத பரிசோதனையை முடித்து மாலையிலேயே உறவினர்களிடம் ஒப்படைத்தார்கள். குழிசேவல் பட்டியைச் சேர்ந்த கணேசன், ஒடைப்பட்டியைச் சேர்ந்த முருகானந்தம், ஈமலம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம், ஆண்டிச்சாமி ஆகிய நான்கு பேர் உடல் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்குப்பிறகு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நான்கு பேரின் உடல்கள் தனித் தனியாக ஆம்புலன்ஸ் மூலம் அவர்களது ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.நான்குபேரின் இறுதிச்சடங்குகளில்அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் பங்கேற்று அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். திருநெல்வேலி ராதாபுரத்திலிருந்து மீட்பு படை இன்ஸ்பெக்டர் கலையரசன் தலைமையில் நேற்று முன்தினம் மாலை முதல் அர்ஜீத்தின் உடலை எடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மைக்கேல் பலத்த காயமடைந்த நிலையில் மதுரை மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தொடர்ந்து அமைச்சர் பெரிய கருப்பன் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடியிருந்த உறவினர்களுக்கு ஆறுதல் கூறி முதல்வர் நிவாரண நிதியிலிருந்து தலாருபாய் 4லட்சம் வீதம் ருபாய் 16லட்சம் வழங்கிட பிறப்பித்துள்ள கடிதம் மற்றும் இறந்து போன நான்கு பேர்களின் குடும்பத்திற்கு முதல்வர் ஆறுதல் தெரிவித்தும் அனுப்பி இருந்த செய்தியினை வாசித்தார். இது தவிர மேலும் தேவைப்பட்ட உதவிகளை செய்து தருவதாக உறுதி கூறினார்.

அமைச்சரின் கோரிக்கையை ஏற்ற அவர்கள் ஆறுதல் அடைந்தார்கள். இறந்துபோன நான்கு பேரின் உடலுக்கு அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தனியாக தனது சொந்த நிதியிலிருந்து கணேசன், முருகானந்தம், ஆறுமுகம், ஆண்டிச்சாமி , ஆகியோரின் உறவினர்களிடம் ருபாய் 50ஆயிரம் வீதம் இரண்டு லட்சத்தினை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் கேபாலசுப்ரமணியன், திருமலை முத்துராம லிங்கம், எம் ஜெயராமன், நகர் கழகசெயலாளர் சி.எம். துரைஆனந்த், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் தகவல் தொழில்நுட்ப அணி காளிமுத்து, வர்த்தக அணி ருக்மா சரவணன், சோமசுந்தரம் மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான் உட்பட ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கொண்டயம்பள்ளி க. இராமசாமி
### மே 22 (1991)



இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, தலைவாசல் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

ஆத்தூர் வட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவராகவும் – வீரகனூர் வீடுகட்டும் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1964ல் நடைபெற்ற இந்தி சட்டஎரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்ததுடன், மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

ராஜிவ்காந்தி படுகொலை செய்யப்பட்டபோது ஏற்பட்ட கலவரத்தில் எதிர்க் கட்சியினரால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி மேற்கு மாவட்டம், காரியமங்கலம் மத்திய ஒன்றியம் இல. கிருஷ்ணன் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 21.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

### மதுரை தெற்கு மாவட்டம்

## அவனியாபுரம் கிழக்கு பகுதி பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை தெற்கு மாவட்டம், அவனியாபுரம் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.மணிசேகரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற க.செந்தாமரைக் கண்ணன், (2/9, பால்காரத் தெரு, ஐராவதநல்லூர், 41வது வட்டம், மதுரை 625009) அவர்கள் அவனியாபுரம் கிழக்குப் பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 21.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---



மதுரையில் முன்னாள் சபாநாயகர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், கழக தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மண்டல தலைவர்கள் சரவண புவனேஸ்வரி, பாண்டிச்செல்வி, பகுதி செயலாளர்கள் அறிவு நிதி, எஸ்.எஸ்.மாறன், பி.கே.செந்தில், சு.பா.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.டி.மணிமாறன், முத்து கணேசன், விஜயலட்சுமி பாண்டியன், முன்னாள் துணை மேயர் மிசா பாண்டியன், அணி அமைப்பாளர்கள் சௌந்தரராஜன், சுப்பிரமணி, உஸ்மான் அலி, தி.மு.க. நிர்வாகிகள் காத்தவராயன், திராவிட மாரி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றார்கள்.